**<u>நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**<u>2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை</u>**

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 278/2016</u>**

**<u>தீர்ப்பு நாள் :12.03.2026</u>**

**<u>CNR NO:TNKI10-000185-2016</u>**

**<u>அரசுக்காக:-</u>**

காவல் ஆய்வாளர்,

உத்தனப்பள்ளி காவல் நிலையம்,

குற்ற எண். 99/2010. ... குற்றமுறையீட்டாளர்

/எதிராக/

பிரகாஷ் (வயது 55/2010),

த/பெ.நிலாத்த ரெட்டி,

பிக்காசிபுரா, வசந்தபுரா மெயின் ரோடு,

பன சங்கரி,

பெங்களூர்.

(எதிரி, வயது மற்றும்

விலாசம் இறுதியறிக்கையின் படி) .... எதிரி

**<u>குற்றவியல் நடைமுறை விதி 106 ன் கீழான விவர பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| | | குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம் |

| வரிசை எண் | பெயர் | தந்தை /கணவர் பெயர் | இனம் அல்லது சாதி | தொழில் | இருப்பிடம் | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிரகாஷ் | நிலாத்த ரெட்டி | இந்து | டிரைவர் | பிக்காசிபுரா, வசந்தபுரா மெயின் ரோடு, பன சங்கரி, பெங்களூர் | 55/2010 |

| நிகழ்வு | முறையீடு | கைது அல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணை யின் தொடக்கம் | விசாரணை யின் முடிவு | தண்டனை அல்லது ஆணை | தாமதத்தி ற்கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 09.08.2010 | 09.08.2010 | 10.08.2010 | 10.08.2010 | 02.07.2012 | 24.02.2026 | 12.03.2026 | - |

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட Roc.No.814/2020/RG/F1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | | | 10.08.2010 |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | | | 23.09.2010 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | --- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | | | 21.10.2010 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுவின் விவரம் | | | |
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு | மேல்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது | யீட்டு வழக்கு விவரம் | |
| | Crl.M.P.No.6130/2010, dt: 10.08.2010, U/s.436 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.254/2026, dt: 24.02.2026, U/s.311 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு.பாலாஜி (Pw1) | 02.07.2012 | 02.07.2012 | அ.சா.1 |
| | திரு.சோமசுந்தரம் ( Pw2) | 02.07.2012 | 02.07.2012 | அ.சா.2 |
| | திரு.சுரேந்தர் (Pw3) | 02.07.2012 | 02.07.2012 | அ.சா.3 |
| | திரு.மோகன் (Pw4) | 02.07.2012 | 02.07.2012 | அ.சா.4 |
| | திரு. சுந்தர் (Pw5) | 21.11.2023 | 21.11.2023 | அ.சா.5 |
| | திரு.மாதேவன் (Pw6) | 24.02.2026 | 24.02.2026 | அ.சா.6 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 03.03.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் | | | --- |

| | மற்றும் தீர்வு | |
|---|---|---|

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் எண் - 2, ஒசூர் நீதிமன்றத்தினால் CC No:119/2010 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னிட்டு இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு [நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஒசூர்] விசாரணைக்காக மாற்றலாகியுள்ள காரணத்தினால், இந்நீதிமன்றத்தினால் CC No:278/2016 என்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் வழங்கப்பட்டு விசாரணையானது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவ்வழக்கில், அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. V. கனிமொழி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.M.முருகேசன் அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 09.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஆவணங்களை நன்கு பரிசீலித்தும், இருதரப்பையும் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

1) இவ்வழக்கானது உத்தனப்பள்ளி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண் - 99/2010 என்ற குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

2) **இறுதியறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டுகளின் சுருக்கம்**:

கடந்த 09.08.2010-ம் தேதி மாலை 16.15 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இராயக்கோட்டை to ஒசூர் ரோட்டில், உத்தனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உத்தனப்பள்ளி to ஒசூர் நோக்கி வந்த வேகனார் கார் KA 05 MG 1438 வண்டியை எதிரி பிரகாஷ், த/பெ.நிலாத்த ரெட்டி என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று எதிரில் ஒசூர் to உத்தனப்பள்ளி நோக்கி வந்த TVS விக்டர் TN 29 -F-1505 வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தில் இருசக்கர வாகனம் TVS விக்டர் வண்டியில் பயணம் செய்த ராஜா (எ) சிவகுமார் என்பவருக்கு தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே மரணத்தை உண்டாக்கியதாகவும் குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி

அழைப்பாணையை பெற்று எதிரியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த தேதியன்று வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் எவ்வித காலதாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில் தாக்கல் செய்திருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் குற்றத்தின் சாராம்சங்களை கு.வி.மு.ச பிரிவு 240 -ன் கீழ் இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழ் குற்றசாட்டுகளை விளக்கி கூறி வினவியபோது, எதிரியானவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டை மறுத்துரைத்து வழக்கினை விசாரணை செய்திட வேண்டுமென கோரியதன் அடிப்படையில் இவ்வழக்கானது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சிகளின் மூலமாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்**

கடந்த 09.08.2010-ம் தேதி மாலை 16.15 மணியளவில் உத்தனப்பள்ளி காவல்

நிலைய எல்லைக்குட்பட்ட இராயக்கோட்டை to ஒசூர் ரோட்டில், உத்தனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உத்தனப்பள்ளி to ஒசூர் நோக்கி வந்த வேகனார் கார் KA 05 MG 1438 வண்டியை எதிரி பிரகாஷ், த/பெ.நிலாத்த ரெட்டி என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று எதிரில் ஒசூர் to உத்தனப்பள்ளி நோக்கி வந்த TVS விக்டர் TN 29 -F-1505 வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தில் இருசக்கர வாகனம் TVS விக்டர் வண்டியில் பயணம் செய்த ராஜா (எ) சிவகுமார் என்பவருக்கு தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே மரணத்தை உண்டாக்கியதாகவும் குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

7) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், அ.சா.1 வாதி எனவும், இவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டது பற்றியும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், மேலும் **புகார் மனு அ.த.சா.ஆ.1 எனவும், அ.சா.2 திரு.சோமசுந்தரம்** என்பவர் இவ்வழக்கில் இறந்துபோனவரின் தந்தை எனவும், சம்பவம் கேள்விப்பட்டு வந்து

பார்த்தது பற்றியும், பிரேத விசாரணையின் போது சாட்சியாக இருந்தது பற்றியும், **அ.சா.3 திரு.சுரேந்திரன்** என்பவர் இறந்து போனவரின் நண்பர் எனவும், இவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டது பற்றியும், பிரேத விசாரணையின் போது சாட்சியாக இருந்தது பற்றியும், **அ.சா.4 திரு.மோகன்** என்பவர் இறந்து போனவரின் நண்பர் எனவும், இவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டது பற்றியும், பிரேத விசாரணையின் போது சாட்சியாக இருந்தது பற்றியும், **அ.சா.5 திரு.சுந்தர்** என்பவர் இறந்து போனவரின் நண்பர் எனவும், சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், மேலும் இவ்வழக்கை விசாரணை செய்து, எதிரியை கைது செய்து, விபத்து வாகனங்களை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு.தங்கவேல் வழக்கிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் அவர்களுக்கு பதிலாக உத்தனப்பள்ளி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் **திரு.மாதேவன் வழக்கு கோப்பின் அடிப்படையில் அ.சா.6 ஆக** சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2 எனவும்,** மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.3 மற்றும் 4 எனவும்,** பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.5 எனவும்,** வேகனார் கார் ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.6 எனவும்,** TVS விக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.7 எனவும்,** பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மகேஷ்

என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8 எனவும்** சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகள் குறித்து எதிரியிடம் குவி.மு.ச. பிரிவு 313 (1) (b)-ன் கீழ் எடுத்துரைத்து வினவியபொழுது எதிரியானவர் அரசு தரப்பில் பொய் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் விசாரணை செய்திட சாட்சிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

10) அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பில் வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், 13 அரசு தரப்பு சாட்சிகளில் 6 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட்டிருப்பதாகவும், அரசு தரப்பில் போடப்பட்டுள்ள சாட்சிகள்

அனைவரும் இறந்தவரின் உறவினர்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 சம்பவத்தை நேரில் தான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்திருப்பதாகவும், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றும், சம்பவ நடந்த இடத்தில் பள்ளி மற்றும் குடியிருக்கும் வீடுகள் உள்ள நிலையில் வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றும், வழக்கில் இறந்த நபர் வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி எதிரி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அதில் எதிரிக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாகவும், எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

12) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**13) எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய**

**<u>பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த விவாதம்.</u>**

(a) கடந்த 09.08.2010-ம் தேதி மாலை 16.15 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இராயக்கோட்டை to ஒசூர் ரோட்டில், உத்தனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உத்தனப்பள்ளி to ஒசூர் நோக்கி வந்த KA 05 MG 1438 என்ற பதிவேண் கொண்ட வேகனார் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று எதிரில் ஒசூர் to உத்தனப்பள்ளி நோக்கி வந்த TVS விக்டர் TN 29 -F-1505 வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்தி TVS விக்டர் வண்டியில் பயணம் செய்த ராஜா (எ) சிவகுமார் என்பவருக்கு தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே மரணத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு எதிரி தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை.

எனவே, கடந்த 09.08.2010-ம் தேதி மாலை 16.15 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இராயக்கோட்டை to ஒசூர் ரோட்டில், உத்தனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உத்தனப்பள்ளி to ஒசூர் நோக்கி வந்த KA 05 MG 1438 என்ற பதிவேண் கொண்ட வேகனார் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று எதிரில் ஒசூர் to உத்தனப்பள்ளி நோக்கி வந்த

TVS விக்டர் TN 29 -F-1505 வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்தி TVS விக்டர் வண்டியில் பயணம் செய்த ராஜா (எ) சிவகுமார் என்பவருக்கு தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே மரணத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபத்தானது இவ்வழக்கின் எதிரி தான் KA 05 MG 1438 என்ற பதிவேண் கொண்ட வேகனார் காரை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தினாரா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை சூழ்நிலைகளுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

(c) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் "**சம்பவம் பற்றி தான் கேள்விப்பட்டதாகவும், சம்பவம் 09.08.2010-ம் தேதி மாலை 4.15 மணிக்கு நடந்தது என்றால் சரிதான், புகார் அன்றிரவு 11.00 மணிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான், சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை, யாருடைய அஜாக்கிரதையால் சம்பவம் நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்**" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தை குறித்து கேள்விப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 முதல்

4 சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் "சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை, என்றால் சரிதான் என்றும், யாருடைய அஜாக்கிரதையால் சம்பவம் நடைபெற்றது என்று தனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி தான் காரை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்று ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

(d) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 தனது சாட்சியத்தில் **"தனது நண்பர் ராஜாவிற்கு விபத்து நடந்ததாக மாலை சுமார் 04.10 மணியளவில் எனக்கு தொலைபேசியில் இன்னொரு நண்பர் தகவல் சொன்னார், அதன்பிறகு மாலை சுமார் 04.20 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன், அப்போது எனது நண்பர் ராஜாவின் உடலை மருத்துவமனைக்கு எடுத்து செல்லும் போது போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் தான் போலிசிடம் ரிப்போர்ட் எதுவும் கொடுக்கவில்லை என்றும், இருசக்கர வாகனத்தின் பெயர் மற்றும் பதிவெண் தெரியாது என்றும், முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான்

போலிஸ் விசாரணையிலும் சொல்லியிருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.5 போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்திற்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்திருப்பது தெரியவருகிறது. மேலும் அ.சா.5-ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(e) மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.6 தனது சாட்கியத்தில் **"வழக்கில் இறந்து போன நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கில் இறந்து போன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்ற விவரம் கோப்புகளின் அடிப்படையில் தெரியுமா என்றால் தலைக்கவசம் அணிந்திருந்ததாக கோப்புகளில் காணப்படவில்லை, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 சாட்சிகள் இறந்தவரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான், விபத்து நடந்த நேரம் மாலை 04.15 மணி பள்ளி முடியும் நேரம் என்றும், அந்த நேரத்தில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றும், அங்கு தனிநபர் சாட்சிகளை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரித்து இருக்கலாம் என்றால் அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(f) மேற்படி அ.சா.6 ன் சாட்சியத்திலிருந்து வழக்கில் இறந்து போன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா, அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்பது குறித்து அரசு தரப்பில் சரியாக புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதை காட்டுவதாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சம்பவம் குறித்து 04.10 மணிக்கு தெரிந்த நிலையில் புகார் மனு கொடுக்க கால தாமதம் ஏற்பட்டதற்கான விளக்கம் எதுவும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் இறந்த நபரின் உறவினர்கள் என்று அ.சா.6 ஒப்பு கொண்டுள்ள நிலையில் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு சம்பவம் நடைபெற்றதா என்பது குறித்து சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(g) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகி அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர், காய சான்று வழங்கிய மருத்துவர் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்படுவதிலிருந்து உரிய முறையில் நீக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் அ.சா.1 முதல் 5 வரையிலான சாட்சிகள் யாரும் விபத்து சமயத்தில் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் விபத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 விபத்து குறித்தும், விபத்தின் போது எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டினார் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி அவர்தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

(h) மேற்படி இவ்வழக்கில் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் யாரும் விபத்தை நேரில் பார்த்ததாகவோ, ஆஜர் எதிரி தான் வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாகவோ, எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்காத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால் தான் விபத்து நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அரசு தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசு தரப்பில் வழக்கில் சரியாக புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதை காட்டுவதாக இருப்பதாக இந்நீதிமன்றம்

கருதுகிறது. மேலும் விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(i) இவ்வாறாக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் அளிக்கப்படவில்லை. எனவே, விபத்தானது அரசு தரப்பில் சொல்லியவாறு நடைபெற்றதா என்பது குறித்து அரசு தரப்பினில் சந்தேகத்திற்குட்பட்ட வகையிலேயே சாட்சியங்கள் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(j) அதுமட்டுமல்லாமல் அரசு தரப்பு சாட்சிகள் எவருமே சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டி வந்த நபரை குறிப்பிட்டு அடையாளம் காண்பித்து எவ்விதமான சாட்சியமும் அளித்திருக்காத நிலையில் வழக்கு சம்பவமானது இவ்வழக்கின் எதிரியினுடைய அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் நடைபெற்றதாக இந்நீதிமன்றம் தன்னிச்சையாக எந்த அனுமானமும் கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(k) மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சம்பவ இடம் மற்றும் விபத்து

நடைபெற்றதாக சொல்லப்படும் விதம், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகள், விபத்து ஏற்படுத்திய நபரை அடையாளம் காட்டப்படாமை, சாட்சியங்களின் நம்பகத்தன்மை மற்றும் விபத்தில் தொடர்புடைய வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது எதிரிக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கத்தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக,

(i) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரியான என்பவருக்கு அளித்து எதிரியை இவ்வழக்கின் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248 (1) -ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

(ii) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத

காரணத்தினால் வழக்கு சொத்துக்கள் குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>:-

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.பாலாஜி (Pw1) | - | அ.சா.1 |
| 2 | திரு.சோமசுந்தரம் ( Pw2) | - | அ.சா.2 |
| 3 | திரு.சுரேந்தர் (Pw3) | - | அ.சா.3 |
| 4 | திரு.மோகன் (Pw4) | - | அ.சா.4 |
| 5 | திரு. சுந்தர் (Pw5) | - | அ.சா.5 |
| 6 | திரு.மாதேவன் (Pw6) | - | அ.சா.6 |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | புகார் மனு - அசல் | - | அ.த.சா.ஆ.1 |
| 2 | முதல் தகவல் அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.2 |
| 3 | பார்வை மகஜர் - அசல் | - | அ.த.சா.ஆ.3 |
| 4 | மாதிரி வரைபடம் - அசல் | - | அ.த.சா.ஆ.4 |
| 5 | பிரேத விசாரணை அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.5 |
| 6 | வேகனார் கார் ஆய்வறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.6 |
| 7. | TVS விக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.7 |
| 8. | பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மகேஷ் என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.8 |

**<u>சான்று பொருள்: இல்லை</u>**

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.</u>**

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**பின்குறிப்பு:-**

1) வழக்கு விசாரணையின்பொழுது எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்தார்.

2) வழக்கு முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின்பொழுது எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.